திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல நீதிமன்றங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதற்குப் புதிய கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும் திரு. பழனிசுவாமிக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தேன். அவ்வளவுதான். (சிரிப்பு).

தண்டனைக்குள்ளான மகளிர் சிறையில் அணிகின்ற வெள்ளை ஆடை

*9029. திருமதி எஸ். பி. சற்குணம் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தண்டனைக்குள்ளான மகளிர் சிறையில் அணிகின்ற வெள்ளை ஆடை மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், வேறு வண்ண ஆடை எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வெள்ளை ஆடைக்குப் பதிலாக கலரில் (மெரூன் கலரில்) வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி எஸ். பி. சற்குணம் : பேரவைத் தலைவர் அவர்களே, தண்டனைக்குள்ளான மகளிருக்கு வெள்ளை ஆடை இதுவரை வழங்கப்பட்டு வந்தது. சென்னையில் மொழிப் போராட்டத்தில் கைதாகி, தமிழ் இனத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு தண்டனை வழங்கி, கைதி ஆடை அவருக்கு வழங்கப்பட்ட நேரத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட எங்களைப் போன்ற தாய்மார்களுக்கும் கடந்த கால அரசியல் வெள்ளைச் சேலைதான் அணிந்து கொள்வதற்குத் தந்தார்கள். அதைப்போலவே, குடிதண்ணீர்ப் பிரச்சினைக்காகப் போரட்டத்தில் ஈடுபட்ட சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர்களையும்' தோழியர்களையும் வேலூர் சிறைச்சாலையிலே கொண்டு போய் அடைத்த போது அங்கு தண்டனைக்குள்ளான தாய்மார்கள் வெள்ளை

1990 ஏப்ரல் 19]

ஆடை அணிந்திருப்பதைப் பார்த்தோம். அவர்கள் கடுமையான பணிகளைச் செய்கிறார்கள். அந்த வெள்ளை ஆடை அடிக்கடி அழுக்காகி விடுகிறது. சௌகரியக் குறைவாகவும், வெள்ளை ஆடை இருக்கிறது. எனவே, அந்த ஆடையை மாற்றி வேறு வண்ண ஆடை கொடுக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு மெரூன் கலரிலே அவர்களுக்கு ஆடை வழங்க இருப்ப தாகச் சொன்னார்கள். எப்போதிருந்து அந்த திட்டம் அமுல் படுத்தப்படும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினருடைய நீண்ட கேள்வியிலேயே விடையும் அடங்கி யிருக்கிறது. சில பெண்கள் வெள்ளை ஆடை அணிவதைக் கூட அழகாக நினைக்கிறார்கள். நம்முடைய பெண் உறுப்பினர் எப்படி நினைக்கிறார்களோ எனக்குத் தெரியாது. (சிரிப்பு) பெண் சிறைவாசிகளைப் பொறுத்தமட்டில், வெள்ளை உடை கள் அணிவது அமங்கலமாகக் கருதுவதாலும், இந்த வெள்ளை நிற உடையினை வேறு நிறத்திற்கு மாற்றம் செய்யும்படியும், அதாவது கலரில், மெரூன் கலரில் பெண் சிறைவாசிகளுக்குப் புடவைகள் வழங்க செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு, மிக விரைவாக முடிவு எடுக்கப்படும்.

9-15 மணி

திருமதி எஸ். பி. சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவலகத்தில் பணியாற்றுகின்ற பெண்கள் வேண்டு மானால் வெள்ளை ஆடை அணிந்து அழகாகப் பணியாற்றலாம். கடுமையான வேலை செய்கின்ற காரணத்தினால்தான் சிறையில் உள்ள மகளிருக்கு வெள்ளை ஆடையை மாற்றவேண்டுமென்ற கோரிக்கையை வைக்கின்றோம். விதவைகள் அணிகின்ற வெள்ளை ஆடைகள் மாற்றப்பட அவர்களுக்கு மறுமணம் செய்து, அவர்களை வண்ண ஆடையில் பார்க்க விழைகின்ற இந்தத் தமிழக அரசு, சாதாரண பெண்கள் வெள்ளை ஆடை உடுத்தி, அவர்களுடைய குடும்பத்தாருக்கு ஒரு வருத்த உணர்ச் சியை ஏற்படுத்த வேண்டாம் என்பதற்காகத்தான் அவர்களுக்கு வெள்ளை ஆடை மாற்றப்பட்டு, வண்ண ஆடை வழங்கவேண்டு மென்ற வேண்டுகோளை விடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சிறைச்சாலைகளுக்கு வெள்ளை ஆடை தான்; பார்டர் மட்டும்தான் வித்தியாசமாக இருக்கும், ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கும், மற்றவர்களுக்கும். ஆகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சற்குணம் அவர்கள் சொன் னதுபோல், ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு பெரூன் கலரும், மற்ற குறைந்த தண்டனைக்காரர்களுக்கு நீல வண்ணத்திலும்; அரசு சேலை அளிப்பதற்கு முயற்சிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பெண் உறுப்பினர் சொல்லும்போது, அதை நான் மறுக்க முடியாது. மேற்கண்ட பெண் உறுப்பினர் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு அந்தந்தக் கலரில் கொடுக்க நடவடிக்கை எடுக்கலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது மகளிர் தொடர்பான கேள்வி என்பதால், ஆண்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது. (சிரிப்பு)

போக்குவரத்துக் கழகம் அமைத்தல்.

***5157.** திரு. கே. பிச்சாண்டி :

திரு. அ. இராசேந்திரன் :

திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை நகரைத் தலைமையிடமாகக் கொண்டு போக்குவரத்துக் கழகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், புதிதாகத் துவங்கப்பட்ட மாவட்டம். மாவட்டம் முழுவதும் சுமார் ஆயிரம் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடம், வேலூரில் உள்ளதால், சரியாக வண்டிகள் நிர்வகிக்கப்படுவதில்லை. நிர்வாக வசதிக்காகவும் ஒழுங்காக வண்டிகள் இயக்கப்படுவதற்கும், அரசுக்கு லாபம் அளிக்கின்ற வகையில், மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் என்று போக்குவரத்துக் குழுவின் கருத்து உள்ளதால், தனியாக திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு போக்குவரத்துக் கழகத்தைத் துவங்கி அதற்கு அன்னை அஞ்சுகம் போக்குவரத்துக் கழகம் என்று பெயரிடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே போக்குவரத்து துறையினுடைய மேம்பாடு குறித்து, பட்டாபிராமன் குழு பரிந்துரையின்பேரில் ஒரு போக்குவரத்துக் கழகம் சிறந்த முறையில் செயலாற்ற வேண்டுமானால், 350 பேருந்துகளிலிருந்து